மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 1 ★ 8 பக்கங்கள் 17-5-59 விலை 13 காசுகள் ★ ஒலி 30

சட்ட சபையைக் கைப்பற்றுவோம்!

அங்கே சுதந்திரப்பிரகடனம் செய்வோம்!

புது சரித்திரம் எழுதுவோம்! புதுமைகள் பல செய்வோம்!

காமராஜ் நகரில்

கலைஞர் கருணாநிதி முழக்கம்

அன்புள்ள தோழர்களே! அருமைத்தாய்மார்களே!

இந்தப் பகுதியிலே. காமராஜ் நகரத்தில், இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழாவும், அதை ஒட்டி சென்னை நகர மேயர் திரு. அரசு, துணை மேயர் திரு. சிவசங்கரன் மற்றும் இந்த வட்ட நகர மன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். சுப்பிரமணியம் ஆகியோருக்குப் பாராட்டு விழாவும் ஏற்பாடு செய்து இதிலே கலந்து பேசும் நல்ல வாய்ப்பினை எனக் களித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இளைஞர் முன்னேற்ற மன்றம் எந்த, எந்த நல்ல காரியங்களையெல்லாம் செய்யும்—செய்ய முயலும், எப்படியெப்படியெல்லாம் மக்கள் நலனுக்காகத் தொண்டாற்றும்—பாடுபடும் என்பனவற்றை யெல்லாம் எனக்கு முன்னர் பேசிய பலரும் விளக்கிக்கூறியதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன். நீங்களும் அது குறித்து மகிழத் தான் செய்கிறீர்கள்!

இளைஞர் முன்னேற்றக் கழகம் இன்று, இங்கே துவக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் இளைஞர் முன்னேற்றக் கழகம் என்பது தான், என்றாலும் இது பெரும்பாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உட் கிளையாகத் தான் பணியாற்றும் என நம்புகிறேன்—அறிகிறேன்! ஏன், நான் இப்படிக் கூறுகிறேன்? இந்த இளைஞர் முன்னேற்றக் கழகத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ள நண்பர்களிலே பலர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பால்-பெரிதும் பற்றும் பாசமும் படைத்தவர்கள்.

எனவே தான், நான் சொல்லுகிறேன், இந்த இளைஞர் முன்னேற்றக் கழகம், ஆலுக்கு விழுது போல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உட்கிளையாக—உறுதுணையாகப் பணியாற்றும், என்று,

இதோடு, திராவிடத்தின் விடுதலைப் போர் முரசம் தட்டப்படும் வீரர் கோட்டமாக—முகமாக—அமையும். திராவிட நாடு திராவிடருக்கே! என்ற விடுதலை கீதமிசைத்திடும்—விளக்கமளித்திடும் கூடமாகத் திகழும், இக்கழகம் என்றுதான் கருதுகிறேன், நான்!

நாம், ஒரு நாள் வாழ்ந்தோம்-ஆனல் இன்று வீழ்ந்தோம், ஏன்? என்று கேட்டு, பழைய வரலாறுகளைப் புரட்டி மக்களிடம் எடுத்துக் காட்டி விளக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பழம் பெரும் வீர வரலாறு படைத்தவர்கள்—பெருங்குடி மக்கள் நாம்! கோட்டை கட்டி,

T. S. பாண்டியன்
எண்: 84, H. பிளாக் ஜீவானந்தம் சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078

கோலோச்சி குதூகலமாக வாழ்ந்தவர்கள் நமது மூதாதையர்கள். ஆனல் இன்று நாம் குடிசைகளிலே, கூனி, குறுகி, பஞ்சைகளாய், பராரிகளாய்—பிதைப்பதைத்த நிலையில் பாழான வாழ்வு-வளம். மிக மிகப் பட்டுப் போன வாழ்வு, வாழ்கிறோம்!

இந்த இழி நிலை ஏன் வந்தது? எப்படி வந்தது? இதை மாற்ற வழி யென்ன? வகை தான் என்ன? என்பதில் எல்லாம், இந்த இளைஞர் முன்னேற்றக்

(3-ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 1 | 17-5-59 | ஒலி 30

'கணை' தொடுக்கிறார்கள்!

நம்மைக் கவிழ்க்க முயல்கிறார்கள்!

சென்ற சில தினங்களுக்கு முன்பு சென்னை நகர மன்றக் கூட்டத்திலிருந்து **காங்கிரஸ் கட்சியினரும்**—காங்கிரஸ் கட்சியும், பிரஜா சோஷலிஸ்டும் தங்கள் கூட்டுறவு இன்பத்தில் கண்ட **நகர சேமநல கூட்டணியினரும்** வெளிநடப்பு செய்திருக்கின்றார்கள்! அமைச்சர்கள் மொழியிலே கூறவேண்டுமானால் நகரமன்றக் கூட்டத்திலிருந்து வெளியே ஓட்டம் பிடித்திருக்கின்றனர்! நாணயமான முறையில் நடந்து கொண்டிருந்தால்—நீதியோடும், முறையோடும் நடந்து கொண்டிருந்தால் "வாக் அவுட்" செய்திருக்கின்றனர், வெளியேறி இருக்கின்றனர் என்று கண்ணியமாகக் கூறலாம்!

ஏறத்தாழ இருபதாண்டு காலத்திற்கும் மேலாக சென்னை நகரசபையை தனது ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு—ஆடாத ஆட்டங்களையெல்லாம் ஆடி—செய்யாத செய்யத்தகாத செயல்களையெல்லாம் செய்து வந்த காங்கிரஸ் கட்சியை மக்கள் துணைகொண்டு வீழ்த்தி—நகர சபையின் அதிகார பீடத்திலிருந்தே விரட்டியடித்திருக்கிறோம்!

மக்கள், வீணர்களை விரட்டியடித்து விட்டு, விவேகமுள்ளவர்களை அழைத்தனர், கொலு மண்டபத்தில் அமர்த்தினர், கோலோச்சும் உரிமையைத் தந்தனர்! திராவிட முன்னேற்றக் கழகமும் மக்கள் இட்ட அன்புக் கட்டளைக்குத் தாள் பணிந்து சென்னை நகரத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது!

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திராவிட முன்னேற்றக்கழகம்—திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் பதவி ஏற்றுக் கொண்டிருக்கும் மேயர் திரு. அ. பொ. அரசு மக்களுக்கு நற்பணி புரிவதாக வாக்குறுதியளித்து—உடனடியாகச் செயல் புரியவும்—நல்ல பல திட்டங்களால் நகரை சீர்படுத்தவும் புறப்பட்டு விட்டார்கள்! தெருத்தெருவாகச் சென்று, சேரிகளைப் பார்வையிட்டு "இந்த தாழ்நிலையைப்போக்க என்ன வழிசெய்யலாம், எப்படிப் பணிபுரியலாம்" என்ற சிந்தனையில் ஈடுபட்டு, அதற்கான வழிவகைகளைக்காண முயற்சி செய்து கொண்டிருக்கிறார்!

சேரிகளை சீர்படுத்துவது!

குடிதண்ணீர் பஞ்சத்தை போக்க முயற்சிப்பது!

சுகாதார வசதிகளைப் பெருக்குவது!

பழுதடைந்து கிடக்கும் சாலைகளைப் பழுது பார்ப்பது!

பள்ளிப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் நடுப்பகல் உணவைப் பெருக்க ஏற்பாடு செய்வது!

இருளில் மூழ்கிக் கிடக்கும் சேரிகளுக்கு ஒளியை வழங்குவது!

ஆகிய பணிகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று மேயர் திரு. அ. பொ. அரசு அவர்கள் அறிவித்து எல்லா கட்சியினரின் ஒத்துழைப்பையும், எல்லாமக்களின் நல்லாதரவையும் கேட்டிருக்கின்றார்கள்!

இது காங்கிரஸ் கட்சிக்குப் பெருத்த அவமானத்தையும்—காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு பெரும் பயத்தையும், அச்சத்தையும், நடுக்கத்தையும் அளித்திருக்கின்றது! "இருபது ஆண்டு காலத்தில் சாதிக்காத, சாதிக்க முடியாத—சாதிக்க ஒரு சிறு முயற்சியும் எடுக்காத காரியங்களையெல்லாம் ஆறே மாதங்களில் சாதித்து விடுவார்கள் போலிருக்கிறதே! இவர்கள் சாதித்து விட்டால் நம்முடைய நாணயம் யோக்கியதை, கௌரவம் எல்லாம் காற்றில் பறந்து விடுமே! பிறகு மக்கள் முகத்தில் நாம் விழிக்க முடியாதே" என்று காங்கிரஸ்காரர்கள் கதிகலங்கி, மனமுடைந்து கிடக்கிறார்கள்!

ஆண்டுக்கொரு மேயரும்—அந்த மேயர்கள் பிடித்துக் குலுக்கிய சீமான்களின் கரங்களும்—அந்த கரங்கள் பட்டதால் இவர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தமும், செல்வாக்கும், இன்னும் பிற மகிழ்ச்சிகளிலும் சொக்கிக் கிடந்த பெருமையைத்தவிர காங்கிரஸ் கட்சி நகர மக்களுக்காக என்ன சாதித்திருக்கிறது! விருந்தும், வைபவமும் நடத்தி நடத்தி சீமான்களின் செல்லப் பிள்ளையாக வாழ வேண்டிய மேயர்கள், சேரிக்குச் சென்றால், சேரி மக்களின் நிலையைக்கண்டு கண்ணீர் விட்டால் இந்த காங்கிரஸ் கோமான்களுக்கு கண்ணில் பொறி பறக்கத்தானே செய்யும்! எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தை நகராட்சிப் பொறுப்பிலிருந்து ஒழித்துக் கட்டுவது என்று முடிவு செய்து அதற்கான பணியில் இறங்கி முனைந்து வேலை செய்ய காங்கிரஸ்காரர்கள் தொடங்கி விட்டனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிக்கச் செய்த முதல் தாக்குதல் தான் இவர்களின் வெளிநடப்பாகும்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் கரங்களை ஒடிப்பதற்காகத் தான் பல்வேறு பிரச்னைகளைக் கிளப்பி, தகராறு செய்து வெளிநடப்பு செய்திருக்கின்றார்கள்!

சென்னை நகர மக்களே! தமிழ்க்குடியில் பிறந்த நல்லவர்களே! காங்கிரஸ்காரர்களும், அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட நகரசேமநல கூட்டணிக்கட்சியினரும், எதற்காக வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்? இவர்கள் ஏதாவது நியாயம் கேட்டு, அதை நாம் புறக்கணித்தோமா? அதற்காக இவர்கள் வெளிநடப்பு செய்தார்களா? திராவிட முன்னேற்றக் கழகம் நீதி தவறிற்றா? நியாயம் வழங்க மறுத்ததா? அல்லது தவறான நெறியில் சென்று நேர்மையைக் கடைப்பிடிக்க மறுத்ததா? எதற்காக இவர்கள் சபையை விட்டு வெளியேறினார்கள்!

நகராட்சி மன்றத்தின் நிலைக்குழுக்களில் நியாயத்திற்கும், நீதிக்கும் புறம்பான முறையில் அதிக இடங்கள் கேட்டு அதைத்தர மறுக்கவே இவர்கள் வெளிநடப்பு செய்திருக்கின்றனர்!

சென்னை நகரசபை நிர்வாகத்தைத் திறம்பட நடத்த ஏழு கமிட்டிகள் உண்டு! ஒவ்வொரு கமிட்டியிலும் ஏழு உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள்!

ஒவ்வொரு கமிட்டியிலும் உள்ள ஏழு உறுப்பினர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நால்வரும், காங்கிரஸ்காரர்களில் ஒருவரும், கம்யூனிஸ்டுகளில் ஒருவரும், நகர சேமநல கூட்டணியினருக்கு ஒரு இடமும் தருவது என்று நமது நகரசபை தி. மு. கழகக் கட்சித் தலைவர் திரு. ஜீவரத்தினம் முடிவு செய்திருந்தார்!

ஆனால் காங்கிரஸ் கட்சியோ தங்களுக்கு ஒவ்வொரு கமிட்டியிலும் மூன்று இடங்களும்—அவர்களுடைய புது உறவினர்களான நகரசேம நல கூட்டணியினருக்கு இரண்டு இடங்களும் வேண்டும் என்று கேட்டனர்! காங்கிரஸ் கட்சிக்கு மூன்றும் அவர்களைச் சார்ந்த கட்சிக்கு இரண்டும் கொடுத்து விட்டால் மீதம் இருப்பது இரண்டு இடங்கள் இடங்கள்தானே? நம்மை முட்டாள்கள் என்று தீர்மானித்து விட்டார்கள் போலும்! ஆட்சிப் பொறுப்பை கவனிக்கும் குழுவின் மெஜாரிட்டி பலத்தை அவர்களிடம் ஒப்புவித்து விட்டு நம்மை நாக்கில் விரலை வைத்துக் கொள்ளச் சொல்லுகிறார்கள் போலும்!

அவர்கள் நம்மைஎப்படிநினைத்தாலும்கடைசிவரையில் திரு. ஜீவரத்தினம் காங்கிரஸ்காரர்களை சமாதானம் செய்தார்கள்! முடிவில் காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கு இரண்டு இடங்களும், அவர்களின் புது உறவினர்களுக்கு இரண்டு இடங்களும் வேண்டுமென்று கேட்டார்களாம்! "இது நியாயமல்ல" என்று திரு. ஜீவரத்தினம் கூறிவிடவே கூட்டணி, கட்சியினர் முதலில் வெளிநடப்பு செய்தனர்! அவர்கள் பின்னே இந்த காங்கிரஸ்காரர்களும் ஓட்டமெடுத்தனர்!

இந்த நிகழ்ச்சி எதைக் காட்டுகிறது! பதவி வெறியும், அதிகார மோகமும் காங்கிரஸ் கட்சிக்குத் தலைக்குமேல் ஏறிவிட்டது என்பதைத்தானே இது சுட்டிக் காட்டுகிறது!

(8-ம் பக்கம் பார்க்க)

தேர்தலில் தோற்றவர்கள் வெறி பிடித்து அலைவார்கள்!

கட்டாரியால் நம் உயிரைக் குடிக்க வருவார்கள்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகம் ஈடுபட்டு, மக்களுக்கு நல்லதோர் விளக்கமளித்து, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பக்கபலமாய்—பாசறையாய் விளங்கும் என்பதிலே நான் மிகவும் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்.

இந்த வட்டத்தில் கழகச் சார்பில் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்ற திரு. சுப்ரமண்யம் நல்ல பட்டாளி! நாட்டிற்கு எப்படியும் பணியாற்ற வேண்டும் என்ற உள்ளம் படைத்தவர்—உறுதி மிகுந்தவர்.

இத்தகைய சக்தி அவரிடம் இருப்பதை நீங்கள் எல்லாம்-வாக்காளர்கள் எல்லாம் உணர்ந்ததால் தான் அவர், வெற்றி வாகை சூடி, வெற்றி வீரராக இன்று மேடையிலே காட்சியளிப்பதைக் காண்கிறோம்-களிப்புமடைகிறோம்!

இந்த வட்டத்தில் சுப்பிரமண்யம், வெற்றி பெறுவாரா? என்பது கேள்விக் குறியாக-முடிவு தெரியாத நிலையில் இருந்த போது, இவர் 'வெற்றி பெற்றார்!' என்ற செய்தி எனக்குக் கிடைத்தது.

சுப்ரமண்யம் 'வெற்றி பெற்றார்', என்ற செய்தியைக் கேட்டதும் நான் அடைந்த அக மகிழ்ச்சியை விட 'அதிர்ச்சி' தான் அதிகம் என்று சொல்வேன்!

'காமராஜ் நகரில்' நமக்கு வெற்றி! என்று எண்ணிய போது ஒரு சிறிது நேரம், ஒரு கணம் அதிர்ச்சி ஏற்பட்டது! அவ்வளவு தான்!

"காமராஜ் நகர்", என்றதும், சாதாரணமாக லெனின் கிராட் என்பதைப் போல பெயர்ப் பொருத்தம் இருக்குமோ! காமராஜரின்—காங்கிரஸ்காரர்களின் சொந்தக் கோட்டை போலும் என்று எண்ணினேன், சில சமயம்!

ஆனால், காமராஜ் நகரத்திலும், தி.மு. கழகத்தைச் சார்ந்த திரு. சுப்ரமண்யம் போட்டியிட முடியும். அதை விட, வெற்றியும் பெறக்கூடும் என்பது தெளிவாகி விட்டது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

காமராஜ் நகர்! நல்ல பெயர் தான்! ஆனால் இது திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டையாக விளங்குகிறது. உண்மையிலேயே, இந்தப் பகுதிக்கு இருந்திருக்க வேண்டிய பெயர் என்ன தெரியுமா? காமராஜ் நகர் அல்ல! அதற்குப் பதில் "அண்ணா நகர்" என்று பெயர் இருந்திருக்க வேண்டும். இது மிகவும் பொருத்தமாகவும் இருக்கும்.

நகர மன்ற தேர்தலில் கழகம் பெற்றுள்ள வெற்றியை குறித்து உங்கள் முகங்களிலே புன்னகையும் பொலிவும் குலுங்கி உள்ளமெலாம் பரவசம் மண்டிக் கிடப்பதைப் பார்க்கிறேன். முகத்தில் பொங்கிடும் களை, அகத்தில் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியினை உணர்த்துகின்றது,

தேர்தலில் வெற்றி பெற்று, நகர மன்ற உறுப்பினர்களாகியுள்ள நமது கழகத் தோழர்கள் தேர்தல் காலத்தில் மக்களுக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளனர் இதனை. இந்தப் பொறுப்பினை, உறுப்பினர்கள் உணரச் செய்வதற்குத்தான் பாராட்டு விழா நடைபெறுகின்றது. எனவே இதனைச் செயல் துவக்க விழா என்று குறிப்பிடுவதும் பொருந்தும்.

பாராட்டுக் கூட்டம் என்று இதைக் கூறுவதை விட, உறுப்பினர்களை ஊக்குவிக்கும் கூட்டம்-உற்சாகப்படுத்தும் கூட்டம் உணர்த்தும் கூட்டம் என்பது சாலப் பொருத்தம் என்று தான் கருதுகிறேன். எதை உணர்த்தும் கூட்டம்?

நமது கழகத்தோழர்கள்தேர்தலில் ஜெயித்தது பெரிதல்ல! ஆம், தோழர்களே! ஆம்! நமது வீரர்கள் ஜெயித்தது பெரிதல்ல என்று தான் கூறுகிறேன். ஏன்! நீங்கள் எல்லாம், வாக்காளர் அனைவரும்-நமது வீரர்கள் ஜெயித்துத் தான் ஆகவேண்டும் என்று தீர்மானித்து விட்டீர்கள்! எனவே அவர்கள் ஜெயிப்பது-ஜெயிக்க வைப்பது நமது கையில்-இருந்தது. எனவே தான் பெரிதல்ல என்று கூறுகிறேன்.

ஜெயித்தது பெரிதல்ல-ஆனால் இதன் மூலம் பெற்றுள்ள பொறுப்பு ஏராளம்! ஏராளம்!

எனவே தான் இக் கூட்டம் ஜெயித்த தோழரைப் பாராட்டி விட்டு, அதே நேரத்தில் அவருக்கு ஏற்பட்டுள்ள மகத்தான பொறுப்புக்களை உணர்த்தும் பயனுள்ள கூட்டமாகவும் அமைவது சிறப்பாகும்.

நமது கழகத்தைச் சார்ந்த, நகர மன்ற உறுப்பினர்களை, எப்படி யெப்படி யெல்லாம் பயன் படுத்த முடியுமோ, அப்படி யெல்லாம் பயன் படுத்திப் பலன் காண வேண்டும். நல்ல நல்ல பணிகளைச் செய்து முடித்திட, நாமெல்லாம் அவர்களுக்கு பெரிதும் ஊக்க மளிக்க வேண்டும்-அவர்களது பெரும்பொறுப்பினை உணர்த்தி உறுதுணையாகவும் இருந்துவர வேண்டும்.

இந்த வகையில் இக் கூட்டம், மிகவும் பயன்படும் எனக்கருதுகிறேன்.

இந்த கூட்டம் நடைபெறும் இந்த இடம் எப்படியிருக்கின்றது! சுற்றிலும் குடிசைகள் ஏழை மக்கள் ஏராளமாக வசிக்குமிடம்! சுகாதாரக் கேடான பகுதி! இப்போது வீசும் 'நறுமணம்' இங்கே எப்போதும் ததும்பியுள்ளது. இப்படிப்பட்ட அவல நிலையில் தான் நம் மக்கள் வாழ்கிறார்கள்!

இந்தப் பகுதியைத் தேடிக் கண்டுபிடிக்க சுமார் ஒரு மணி நேரம் ஆயிற்று! எந்த மூலையில் கூட்டம்? என்று கண்டுபிடித்து எங்கெந்தச் சந்துகள்-மேடு பள்ளங்களைக் கடந்து வர வேண்டும்! என்று தெரிந்து நான் இங்கு வந்து சேர சுமார் ஒரு மணி நேரம் பிடித்து விட்டது.

ஒரு வழியாக கூட்டம் நடக்கும் இடம் வந்து சேர்ந்ததும் 'அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டோம். இங்கே பல ஆயிரக் கணக்கில் கூடியிருக்கின்றீர்கள். மேடையிலே, நாங்கள் சிலர், ஒளியில் அமர்ந்திருப்பது உங்களுக்கெல்லாம் தெரிகின்றது. எங்களை உங்களால் பார்க்க முடிகின்றது! ஆனால், உங்களில் பலரை, மிகப் பெரும் பகுதியினரை மேடையிலிருந்து எங்களால் காணமுடியவில்லை-பார்க்கக்கூடவில்லை. ஏன்! 'ஒளி' இல்லை. விளக்குகள் போடவும் முடியாத நிலை.

ஒளியிலே, மேடையில் சிலர்! இருளிலே, கூட்டத்தில் பலர்-என்ற நிலை தான்உள்ளது!

இதுதான், நாட்டின் இன்றைய உண்மையான நிலையும் கூட! 'ஒளியிலே சிலர்! இருளிலே பலர்! ஓய்யார வாழ்விலே சிலர்-ஓயாத வேதனையிலே பலர்" என்ற நிலை தான் நாட்டில், இன்று இருக்கின்றது என்பதைக் காணுகின்றோம்!

இருளில் உழன்றுவாடிவதங்கி வேதனைப்படும், பலரையும், ஒளி மிகுந்த—வளமும் வசதியும் படைத்த வாழ்க்கைப்பாதைக்கு அழைத்துச் செல்லும்—அமைத்துத்தரும்பெரும்பணியைத்தான், இன்று, திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

குடிசை வாழ் மக்களை இது வரை பலர் கண்டனர். குடிசைகளிலிருந்து கிளம்பும் சோகக் குமுறல்களைக் கேட்டனர். என்ன பயன் ஏற்பட்டது?

பலர் கண்டும் காணாதவர் போல இருந்து விட்டனர். கேட்டும் கேளாதவர் போலச்சென்று விட்டனர்.

இன்று, உங்கள் பிரதிநிதியாக, நகர மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் வீற்றிருக்கிறார். குடிசை மக்களைக் கண்டும், அவர்களது குமுறலைக் கேட்டும் அவரால் முடிந்ததை யெல்லாம், நிச்சயம் செய்ய முயலுவார்!

எங்களைக் காணுங்கள்! எமக்காகப் பாடுபடுங்கள்! வாதாடிப் போராடுங்கள்! என்று கேட்கவும்—பொறுப்பினை உணர்த்தவும் இக்கூட்டம் நடைபெறுகின்றது. இதனை, கழகத்தைச் சார்ந்த நகர மன்ற உறுப்பினர்கள் எல்லாம் உணர்ந்து, சிந்தையில் நன்கு பதிய வைத்துக் கொள்ள வேண்டுகிறேன்!

கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் என்ன சொல்லுகிறார்கள்? செய்கிறார்கள், இன்று!

குடிசைகளைக் கண்டோம்,—காண்கிறோம்! சுகாதாரக் கேடுகள்—மற்றும் பல குறைபாடுகள் உள்ளன! அவற்றையெல்லாம் நீக்க முயல்கிறோம்! என்று தானே சொல்லி வருகிறார்கள்!

நமது மேயர் அரசுவும், உதவி மேயர் சிவசங்கரனும், வட்டத்திற்கு ஒரு நாள், கார்ப்பரேஷன் அதிகாரிகளுடன் "இன்ஸ்பெக்ஷன்" செய்யவருகிறோம், வந்து உங்கள் குறைகளை நேரில் கண்டு கேட்டு, முடிந்ததைச் செய்கிறோம் என்று உறுதி கூறியுள்ளனர்.

இதே நிலையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினரோ, மேயரோ, மந்திரியோ என்ன சொல்லுகின்றனர்? சொல்ல முடிகிறது! "சுதந்திரம் வந்தது—எல்லோரும் சுகமாக வாழ்கிறோம். நம்ம சர்க்கார்—காந்தி சர்க்கார் எல்லாம் செய்து வருகிறது, என்ற முறையில் திருப்தி தெரிவிப்பதோடு தானே நிற்கிறார்கள்?

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் இன்று மேயர்—துணை மேயர் பதவியில் உள்ளனர்! நகரசபையில் ஆளும் கட்சியினராக இருக்கின்றனர். எனவே தான் அவர்களுக்கு 'இருள்' தெரிகிறது. 'ஒளி' தரவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது—இதற்காகப் 'பாடுபடுகிறோம்' என்று உறுதி தரவும் முடிகிறது என்பதையும், பொது மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்!

மக்களைச் சூழ்ந்துள்ள 'இருள்' நீக்க "முயலுகிறோம்". அவர்களது வாழ்வில் 'ஒளி' ஏற்பட எங்களால் ஆனதையெல்லாம் செய்து 'முயற்சிக்கிறோம், என்று தான் நாம், மக்களிடம் சொல்லி வருகிறோம். இதனை நன்கு கவனிக்க வேண்டுகிறேன்,

"முயலுகிறோம்," "முடிக்க முயற்சி செய்கிறோம்" என்ற நிலையில்தான்—கட்டத்தில் தான் நிலைமையில் தான்-குறிப்பிட்ட கட்டுப்பட்ட வசதி-வாய்ப்புள்ள சூழ்நிலையில் தான் இன்று திராவிட முன்னேற்றக் கழகமோ-அல்லது நகர சபை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களோ இருக்கின்றனர். இதைத் தான் கவனித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

'செய்வோம்-செய்து முடிப்போம்", என்ற 'கட்டம்'—நிலைமை, இன்னும் நமக்கு வர

பிணங்கள் பலவற்றைக் கண்டோம்!

அஞ்சவில்லை, அயரவில்லை, விடுதலை முழக்கமும் நிற்கவில்லை!

வில்லை; அந்தக் கட்டம்—இடம் எப்போது ஏற்படும்!

அந்த கட்டம் ஏற்பட, இப்போது மந்திரி சபையில் காமராஜர் அமர்ந்துள்ள இடத்தில், அறிஞர் அண்ணா உட்கார வேண்டும், நாவலர் நெடுஞ்செழியன் சுப்ரமண்யம் இடத்திலும், அன்பழகன் ராமையாவின் பதவியிலும், திருமதி சத்தியவாணிமுத்து திருமதி லூர்தம்மாளுக்குப் பதிலாகவும், கக்கனுக்குப் பதில், துணைமேயர் சிவசங்கரன் போன்ற பழங்குடி மகனும் மற்றும், மற்றும் சர்க்காரில் உள்ள பொறுப்புகள் அனைத்திலும் நம்மவர்கள்' திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இடம்பெற வேண்டும்.

இந்த நிலைமை—மாற்றம் ஏற்படும்வரை 'முயலுவோம் முயற்சிப்போம்' என்ற கட்டத்தில் இருக்க நேரிடும். அதுவரை 'செய்வோம்—செய்து முடிப்போம்', என்று உறுதி கூற இயலாதவர்களாகத் தான் நமது நிலைமை உள்ளது.

அத்தகையகட்டம், அதிகாரம் நமக்கு ஏற்படும் வரையில் மக்களுக்கு எங்களால் முடிந்ததை எல்லாம செய்வோம்—மற்றவைகளையும் செய்ய முயற்சிப்போம் - அதற்காக எங்களால் ஆனவரை அரசினரிடம் வாதாடிப்பெற பாடுபடுவோம்!போராடித்தான் வருவோம் என்று உறுதி கூறுகிறோம்.

சென்னை கார்ப்பரேஷன் ஆட்சிப் பொறுப்பு நம்மிடம் இருக்கின்றது. இதன் மூலம், நகர சபையில் நல்ல திட்டங்கள் தீட்டி உருப்படியான தீர்மானங்களை நிறைவேற்றிவிட முடியும்.

ஆனால், "தீர்மானத்தை" செயல் வடிவமாக்கி நடைமுறையில் நிறைவேற்றும் 'சக்தி' மாநில சர்க்காருக்குந்தான் இருக்கின்றது. இதைத் தெளிவாக உணர்ந்தாக வேண்டும்!

கார்ப்பரேஷனில், என்ன தான் தீர்மானம் செய்தாலும் அதைச் செயல்படுத்த, மாநில சர்க்காருடைய அனுமதி வேண்டும். அதோடு அவர்களது சில பலஅனுசரணைகளும், நிதி உதவியும் அவசியமாகிறது. நமது திட்டங்களையும், தீர்மானங்களையும் மாநில சர்க்காரில் அமர்ந்துள்ள காங்கிரஸ் சாக்கார்—காமராஜர் சர்க்கார் - அனுமதித்து, உதவியும் செய்தால் நாம் அவைகளை நல்லபடிநிறைவேற்ற முடியும் — நிறைவேற்றுவோம்.

மாநில சர்க்கார் தக்கபடி ஒத்துழைக்காவிடில் நகர சபையில் நாம்,நம் திட்டப்படி செயலாற்ற முடியாமற் போகலாம். ஆனால் அப்படிப்பட்ட 'ஒத்துழையாமை நிலைமை ஏற்படுமானால் நாம் சும்மா இருக்கமாட்டோம்.

சட்டசபையில் உள்ள 15 தி. மு. கழக உறுப்பினர்களும் இதைப்பற்றி கேள்விகள் கேட்போம். நல்ல திட்டங்களை அனுமதிக்காதது ஏன்என்று வாதாடுவோம். போராடியேனும் அவைகளுக்கான அனுமதியும் உதவியும் பெற முயற்சிப்போம்.

சென்னை நகர சபை ஒரு நல்ல திட்டம் தீட்டி, தீர்மானம் நிறைவேற்றி—மாநில சர்க்காருக்கு அனுப்பிவைக்கிறது. அதற்கு அனுமதி வழங்கி, "இதோ! நிதி!" என்று உதவும் அதிகாரம் நம்மிடம் இன்று இல்லை. சட்ட சபையில் நமக்கு பெரும்பான்மை பலம் இல்லை.

இந்த நிலைமையை — பெரும்பான்மையை ஏற்படுத்துவது யார்?

எங்களிடம் நகர மன்ற நிர்வாகத்தை ஒப்படைத்தது போல, பொது மக்களாகிய நீங்கள்தான் அதையும் செய்யவேண்டும் — பெருவாரியாக தி. மு. கழகத்தினரை சட்டசபைக்கு அனுப்பியாக வேண்டும்.

சட்ட சபையில் பெரும்பான்மையினராக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்று விட்டால் போதுமா? மந்திரி சபை அமைத்துவிட்டாலே எல்லாம் தீர்ந்து விடுமா? 'இருள்' அகன்று 'ஒளி' பிறந்திடுமா? என்று கேட்கலாம்!

இப்படிக்கேட்டால், "அது மாத்திரம் போதாது" என்று தான் பதில் சொல்லுவோம்—சொல்லுகிறோம்.

இதனால் மட்டும் மக்களைச் சூழ்ந்துள்ள 'இருள்' முழுவதையும்—அடியோடு அகற்றிவிட முடியும்—வாழ்வில் 'ஒளி' பிறந்திடச் செய்திட முடியும் என்று சொல்ல நாங்கள் தயாராக இல்லை.

சட்டசபையைக் கைப்பற்றி விட்டால் போதும். உடனே வாழ வழி பிறந்துவிடும்—வளம் பெருகி விடும் — வயல்கள் எங்கும் பசுமை நிறைந்துவிடும். மலை அருவிகள்—ஆறுகள் அனைத்திலும் அணைக்கட்டுகளைக் கட்டி முடித்துவிட முடியும் குறைபாடுகள் எல்லாவற்றையும் போக்கி, நிறைவும் நிம்மதியுங்கொண்ட வாழ்க்கைப்பாதையை அமைத்து விட முடியும் என்று நாங்கள் சொல்லவில்லை — சொல்லவும் மாட்டோம்.

இப்படி யெல்லாம் சொல்லி—எண்ணி மக்களையும் சரி— எங்களையும் சரி ஏமாற்றவோ—ஏமாற்றிக் கொள்ளவோ, நாங்கள்—தி. மு. கழகம் ஒருசிறிதும் தயாராக இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேரிகள் எல்லாம் சிங்காரச் சோலைகளாக மாற வேண்டும். பாலை வனம் யாவும் சோலைவனமாய்க் காட்சியளிக்க வேண்டும். இன்று பரிதாபத்திற்கு உரியவர்களாய், பசியால் — பிணியினால் வாடி வதங்குவோர் நிலைமைகள் எல்லாம் சீர்பட்டு, அந்தப் பரிதாபத்திற்கு உரியவர்களது முகங்களிலே பரவசம் குலுங்க வேண்டும். துன்பத்தையே தொட்டு வாழும் நிலைபடைத்த மாந்தர்கள் யாவரும் இன்பத்தைத் தழுவி வாழ்ந்திடும் சமுதாயம் ஏற்பட்டாக வேண்டும்.

இதுதான் நமது இலட்சியம்! இறுதி மூச்சு! கடைசிக் குறிக்கோள். இதனை அடைய, ஒரே வழி—"திராவிட நாடு திராவிடருக்கே" என்ற நிலைமை ஏற்படுவதுதான்—ஏற்படுத்துவதுதான்

திராவிட நாடு திராவிடருக்கே! இந்த இறுதி இலட்சியத்தை அடையத்தான்—நாம் நமது பயணத்தைத் தொடங்கியுள்ளோம்.

இந்தப் பயணம்—நமது இலட்சியப் பயணம் மிக நீண்ட பயணம்! நாளெல்லாம்—நாமெல்லாம் தொடர்ந்துசெய்து முடிக்க வேண்டிய பெரும் பயணம்! என்பதையும் உணரவேண்டுகிறேன்.

இத்தகைய நீண்ட பயணத்தில் ஒரு பகுதியில் — கோடை வெயில் காலப் பயணத்தில் ஏற்படும் சிறிதளவு துன்பத்தைப் போக்கிக் கொள்ளக் கிடைக்கும் இளைப்பாரும் சாதனங்களைப் போன்றதுதான், சென்னை நகர சபைத் தேர்தலில் கிடைத்தது போன்ற வெற்றிகள் எல்லாம்.

ஆம்! தோழர்களே! ஆம்! கோடைப் பயணத்தில் ஏற்படும் அலுப்பை, ஆயாசத்தைப்போக்கிக் கொள்ள வழியில் உள்ள தண்ணீர்ப் பந்தலில் கிடைக்கும் 'நீர் மோர்' போல — நமது களைப்பை நீக்கி மேலும் பயணத்தைத் தொடங்க ஊக்குவிப்பது போன்றதுதான், இத்தகைய வெற்றிகள் எல்லாம்!

"நல்ல வேலை செய்கிறீர்கள்", என்று முதுகில் தட்டிக் கொடுத்து, நம்மையெல்லாம்—மேலும் சீரும் சிறப்புடனும், தீவிரமாக உழைக்க, இன்று கிடைத்துள்ள வெற்றிகள் 'ஊக்குவிக்கும் வெற்றிகள்! என்றுதான் கொள்ளவேண்டும்.

இன்னும் வேகம்! இன்னும் தீவிரம், என்று தாய்மார், குழந்தைகளை தட்டிக் கொடுத்து ஊக்கி படிக்கச் செய்வதுபோல, பொதுமக்கள் நம்மையும் தட்டிக் கொடுக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

சென்னை நகர சபைத் தேர்தலில் பெருவாரியாக வெற்றி பெற்றோம். நிர்வாகப் பொறுப்பும் ஏற்றோம். இதுவேபோதும்! கடையைக் கட்டி விடுவோம் என்று நாம் கருதவில்லை, ஒரு சிறிதும்.

நாம் தேடுவது இதுதான்! நமது இலட்சியத்தின் கடைசி முகடு—முடிவு - நகர சபையைப் பிடிப்பது!சட்டசபையைக் கைப்பற்றுவது! ஆகியவைகள்தான் என்று நாம் வகுத்துக்கொண்டிருக்கவில்லை. நமது இறுதி இலட்சியம் திராவிட நாடு திராவிடருக்கே ஆகவேண்டும் என்பது தான்.

இந்த இறுதி இலட்சியத்திற்காக—அதனை அடைவதற்காக நாம் செய்தாக வேண்டிய பயணம் நெடுந்தூரத்தில் இருக்கின்றது. அதற்கான பாதையைக் கடக்க நாம் தரவேண்டிய விலை—செய்து தீரவேண்டியதியாகங்கள் ஏராளம்!—ஏராளம்! அவை சாதாரணமானது அல்லவே அல்லஎன்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடந்த பத்தாண்டு காலமாக நாம் நடந்து வந்த இலட்சியப் பாதையிலே நாம் பட்ட துன்பங்கள், அடைந்த கஷ்ட நஷ்டங்கள், தத்தம் செய்த உயிர்கள், பிணமான மாவீரர்கள் அநேகம்! அநேகம்!

இந்தப் பத்தாண்டு காலமாக, நாம் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறோம்! ஒரு கணம் பெருமூச்சு விடுகிறோம்! மேலும் வழி நடக்கிறோம். நமது இறுதி இலட்சியத்தை நோக்கி!

1949-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 17-ந் தேதி சிங்காரச் சென்னையிலே, ராபின்சன் பூங்காவிலே, ஆகாயத்தில் ஓடும் மேகங்களும், நாமும் போட்டியிட்டு கண்ணீர்த் துளிகளைப் பொழிந்த வண்ணம் உதயமானவர்கள்—நாம்!

திராவிடர் கழகத்தை விட்டு பிரிந்தோம் அன்று — திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தோம்—அன்று முதல் இன்று வரை — பத்தாண்டு காலமாக நாம் பிரிந்தபோது நம்முடன் கொண்டு வந்த இலட்சியத்தைக் கட்டிக் காத்து வளர்த்து வருகிறோம்!

பெரியாரை விட்டுப் பிரிந்தோம். ரூபாய் ஐந்து இலட்சத்தையும் விட்டுப் பிரிந்தோம்! நம்முடன் அப்போதும் சரி—இப்போதும் சரி இருந்தது—இருப்பது — நமது கொள்கைதான்—திராவிட நாடு திராவிடருக்கே என்ற மாபெரும் இலட்சியம் ஒன்றுதான்!

இலட்சங்கள் பெரிதல்ல! இலட்சியமே பெரிது! எனப் பிரிந்து வந்தோம்! வேகமாக நடைபோட்டு வருகிறோம். பத்து ஆண்டு காலம் ஓடிவிட்டது, நமது இலட்சிய புரிப் பயணம் தொடங்கி!

நாம் கடந்து வந்த பாதையை—தூரத்தை எண்ணிப் பெருமூச்சு விடுகிறோம் — அடைந்த வெற்றிகளை எண்ணிப் பேரானந்தம் அடைகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம், கடந்த பத்து ஆண்டுகளில் பெற்றுள்ள மகத்தான வளர்ச்சி கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். கழகக் கூட்டம் என்றால் பட்டி தொட்டி முதல் — சிற்றூர், பேரூர், பட்டினம் வரை எங்கும் — எப்போதும் பல்லாயிரம் — இலட்சம் என்ற அளவில் மக்கள் ஏராளம் ஏராளமாகக் கூடுகின்றனர்!

திக்கெட்டும் திராவிட முன்னேற்றக் கழகம் பரவிக் கிடக்கிறது! நாடெங்கும் திராவிட முரசு கொட்டி வருகிறது. மக்கள் ஆதரவு நித்தம் — நித்தம் பெருகியபடியே உள்ளது என்பதை யெல்லாம் எண்ணிப் பெருமையும் பூரிப்புமடைகிறோம்!

இத்தகைய மகத்தான நிலை

திராவிடத்தில் மூண்டுள்ள புரட்சிக் கனலை அழிக்க முடியாது-எவராலுமே அணைக்க முடியாது !

மையை அடைய நாம் செய்த தொண்டு எவ்வளவு? பட்ட கஷ்டங்கள் எத்துணை? நாம் நடந்து வந்த பாதையிலே எவ்வளவு கள்ளி — காளான்களைக் கடந்து வந்தோம், முட் புதர்களையும் தாண்டி வந்தோம்!

நாம் நமது இலட்சியபுரி பயணத்தைத் 'துவக்கினோம். பத்தாண்டு காலம் வேகமாக நடைபோட்டோம். ஓரளவு வெற்றி பெற்றுள்ள இன்று நாம் நடந்து வந்த பாதையை எண்ணிப் பார்க்கிறோம்! திரும்பிப் பார்க்கிறோம்!

திரும்பிப் பார்க்கிறோம்! பயணத்தின் துவக்கத்தில்நம்முடன் இருந்த சில நல்லவர்களைக் காணவில்லை—தூய தொண்டர்களை இழந்துவிட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ஆம்! தோழர்களே! ஆம்! நம்முடன் புறப்பட்ட சில இலட்சிய வீரர்களை —கடமை தவறுக் கட்டிளங்காளைகளை, நாம் நமது பாதையில்—பலி கொடுத்து விட்டோம்—நம்மை விட்டுப் பிரிந்துவிட்டனர்—பிரிக்கப்பட்டுவிட்டனர்-ஏன்? அவர்கள் பிணமானார்கள் — பிணமாக்கப்பட்டு விட்டனர் என்ற காரணத்தால்!

நாம் கடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறோம். பதினைந்தாவது மைலில் தாளமுத்து நடராசன் ஆகியோரது பிணங்கள் வீழ்ந்து கிடப்பதைக் காண்கிறோம்—அழுகிறோம்—கண்ணீர் வடிக்கிறோம்! கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் திரும்பிப் பார்க்கிறோம்!

உடையார்பாளையம் வேலாயுதத்தின் பிணம் பதின்மூன்றாவது மைலில் கிடக்கிறது! பத்தாவது மைலில் வட சென்னைப் பாண்டியன்படுகொலைக்குஆளாகிப் பிணமாகக் கிடக்கும் காட்சியைக் காண்கிறோம்! அழுகிறோம்—கண்ணீர் வடிக்கிறோம் கண்களைத் துடைத்துக் கொள்கிறோம்! மீண்டும் திரும்பிப் பார்க்கிறோம்!

எட்டாவது மைலில் லால்குடி நடராஜன் குண்டடிபட்டு பிணமாகக் கிடக்கிறார். ஐந்தாவது மைலில் நெல்லிக் குப்பம் மஜீத் குத்துண்டு குடல்சரிந்து மாண்டு மடிந்து கிடப்பதையும் பார்த்து அழுகிறோம் — கண்ணீர்த் துளிகளைச் சிந்துகிறோம்! கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் திரும்பிப் பார்க்கிறோம்!

மூன்றாவது மைலில், தென்பாண்டிக் கடல்முத்து—தூத்துக்குடி தந்திட்ட தங்கம்—செயல் வீரன் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டு — பிணமாக நட்ட நடு வீதியிலே கிடப்பதைக் கண்டு அழுகிறோம்—கண்ணீர் விடுகிறோம்!

இத்தனை பிணங்களும் நம்மவர்களுடைய பிணங்கள்! நம்மோடு, நமது பயணத்தில் உயிரோடு நடந்து வந்தவர்கள் தான்! ஆனால், அந்தோ! பரிதாபம்! இவர்கள் அனைவரும்பிணமானார்கள்—பிணமாக்கப்பட்டார்கள்!

நம்மருந் தோழர்கள் பிணமானார்கள் — பிணமாக்கப் பட்டார்கள்! கொடிய விஷப் பாம்புகளால்—சீறிவரும் சிங்கங்களால்—பாயும் வேங்கைகளால் —அரசியல் அநாகரிகம் மிகுந்த காட்டுமிராண்டி அடக்குமுறை தர்பாரினால்மாய்க்கப்பட்டார்கள் பிணமாகச் சாய்க்கப்பட்டார்கள்!

கீழே சாய்ந்த — சாய்க்கப்பட்ட பிணங்களை, அடுக்கி— அடுக்கி, நாம் நடந்து வந்தோம்! பிணங்களைப் புதைக்கக் கூட நேரமில்லை, நமக்கு. அவ்வளவு வேகமாமாக--நாம் நமது இலட்சிய புரி நோக்கி நடைபோட்டுத் தான் வந்தோம்—வருகிறோம்!

நமது பாதையில் ஒரு கணம் நிற்கிறோம்! வீழ்ந்து கிடக்கும் பிணங்களைக் காண்கிறோம் - யோசிக்கிறோம்!

யோசிக்கிறோம் ஒரு கணம்! "நமக்கும் அந்த கதி வருமோ?", என்ற அச்சத்தால் அல்ல! அல்ல! வீழ்ந்துபட்ட பிணங்களை தொடர நம்மில் இன்னும் எத்தனை பேர் உள்ளனர்! என்பதைத் தான் எண்ணிப்பார்க்கிறோம்!

ஆம்! இலட்சியபுரிப் பயணத்தின் போது ஏற்பட்ட இடுக்கண்களுக்கும், இடர்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகி மாண்ட மாவீரர்களே! உங்களைத் தொடர, நீங்கள் செய்த பணியினைத் தொடர்ந்து செய்து முடித்திட, இதோ ஆயிரமாயிரம் பேர்-அறிஞர் அண்ணாவின் தம்பிமார்கள்-படை வரிசையெனக் காத்திருக்கின்றனர் என்று கூறி வீரவணக்கம் செலுத்துகிறோம்! மேலும் வழி நடக்கத் தொடங்குகிறோம்!

இத்தனை பிணங்களைக் கண்டும், நம்முடைய விடுதலை முழக்கம் ஓய்ந்து விடவில்லை. திராவிடத்தில் எழுந்துள்ள தேசியக் கனலை அணைத்துவிட முடியவில்லை. பணபலம் – அடக்குமுறை பாணம்-பலம் ஆகியவற்றினாலும் நமது இலட்சியப்பயணம் ஒரு சிறிதும் தடை படவில்லை- இனியும் தடைபடாது! மாறாக, மேலும் மேலும் வேகமாகச் செல்லத்தான் ஊக்கமளிக்கின்றது - உற்சாகப்படுத்துகின்றது என்பது கண்டு மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன். . . .

நாம் வளர்ந்து வருகிறோம்-நிச்சயமாக வளர்ந்திருக்கிறோம்!

தென்னகமெங்கும் வெற்றிப் பவனி !

கதவைத் தட்டித் தட்டிக் கேட்கிறேம்!

அலட்சியம் செய்யாதே! ஆணவங் கொள்ளாதே!

கழகத்திற்கு மக்களிடையே நல்லாதரவு பெருகிவந்தபடியே உள்ளது.

சாதாரணமானவர்கள் சாமன்யர்கள் தான், நாம் என்றும் நமதுகழகம் "பிறர் கண்ணை உறுத்தும்" அளவுக்கு வளர்ந்து தான் உள்ளது!

பெரியார் சொன்னர் "ஏனே தானேக்கள்" இவர்கள் என்று! ராயபுரத்திலே உள்ள ஒரு பத்து சிறுவர்களால் என்ன செய்துவிடமுடியும்! சாதித்து விடக்கூடும் என்றும் அவர் கேலி செய்தார்! 'ஓட்டை உடைசல்கள்', கண்ணீர்த் துளிகள். அவர்களால் காரியம் எதுவும் செய்ய முடியாது என்றும் நம்மைப் பற்றி அலட்சியமாகப் பேசப்பட்டது!

பிரபு காமராஜர் மொழியிலே சொல்லப் போனல், நாமெல்லாம் 'பிச்சைக்கார்கள்!'

இந்தப் பிச்சைக்காரர்கள்--ஏனே தானேக்கள்-சிறுவர்கள் ஓட்டை உடைசல்கள், இன்று உள்ள நிலைமை, என்ன? எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்!

ஐந்து அல்லது ஆறு ஆண்டு காலமாக, தி,மு.கழகம் இல்லாத இடங்களில் எல்லாம், இன்று இருப்பதைப் பார்க்கிறேம்.

பலப்பல நகர மன்றங்களிலே தி.மு.கழக உறுப்பினர்கள் உள்ளனரே!

தற்போது சென்னை மாநிலமெங்கும் நடைபெற்று முடிவுற்ற நகர சபைத் தேர்தல்களிலே,நாம்-தி. மு, கழகத்தினராகிய நாம், நல்ல அளவில் வெற்றி பெற்றிருக்கிறேம்! கணிசமான இடங்களைக் கைப்பற்றியிருக்கிறேம்!

சேலம் நகர சபையில் இன்று நாம் 11 பேர். தஞ்சை நகர சபையில் முன்பு இரண்டு பேர் தான் நம்மவர் எனத்தகுந்தவர்கள் இருந்தனர் இன்றே, 14 பேர் உள்ளனர், காஞ்சிபுரத்தில் முன்பு நான்கு பேர் தான்! இப்போது எட்டு பேர் இடம் பெற்றுள்ளனர், வேலூரில் இரண்டாக இருந்த இடம் இப்போது ஏழு ஆக உயர்ந்துள்ளது ஒருவர் கூட இல்லாமல் இருந்த கோவை நகரசபையில் இன்று ஆறு பேர் கழகத் தோழர்கள் உறுப்பினராகியிருக்கின்றுர்கள்.

இது போலவே இன்னும்பலப்பல இடங்களிலே,நாம் புதிதாக கணிசமான அளவுக்கு வெற்றி பெற்று உள்ளோம்!

இது மட்டுமா! இதோ, சென்னை மாநகரில் 45 இடங்களில் வெற்றி பெற்றேம். மாநகர் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்று இருக்கிறேம். மேயர்-துணைமேயர் இருவரும் நமது தோழர்கள்!

இவையெல்லாம் - இத்தகைய வெற்றிகள் எல்லாம் எதைக் குறிக்கின்றன! எதனை எடுத்துக் காட்டுகின்றன?

காங்கிரஸ் ஏற்கனவே பல இடங்களில் பெற்றிருந்த இடங்களை இழந்திருக்கின்றது. ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கனவே இல்லாத பல இடங்களைப் பெற்றிருக்கின்றது என்பதைத் தானே குறிக்கின்றன! எடுத்துக் காட்டுகின்றன!

ஆம், தோழர்களே! ஆம். காங்கிரஸ் இதுவரை பெற்றிருந்ததை இழந்துள்ளது. நாம் தி. மு. கழகம் இல்லாததைப் பெற்றிருக்கின்றேம். இது உண்மை!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பருவமங்கை என்று வர்ணிப்பது உண்டு. அத்தகைய பருவ மங்கை இதுவரை அவளிடம் இல்லாததைப் பெற்றிருக்கிருள்! அதாவது கழுத்திலே 'தாலி'யைப் பெற்றிருக்கிருள்! இல்வாழ்வு நடத்துகிருள்,இன்பமாக!

காங்கிரஸ் 'இருந்ததை' இழந்திருக்கின்றது. அப்படியானல் காங்கிரஸ் தன்னிடமிருந்த 'எதை' இழந்துள்ளது என்பதை, நான் கூறவிரும்பவில்லை—நீங்களே யோசித்துத் தெரிந்து கொள்வீர்கள் என்று சொல்லாமலேயே விட்டு விடுகிறேன்.

தேர்தலில் தோற்ற சில காங்கிரசார் 'கூச்சல்' போடுவதாகவும், 'தொல்லை' தருவதாகவும் சிலர் சற்று ஆத்திரப்பட்டு பேசினர்கள். இது தவறு-கூடாது!

நான் கூடத்தான் முன்பெல்லாம் அதிகம் ஆத்திரப்பட்டு வந்தேன். ஆனல் 'பொறுப்பு' அதிகரிக்க, அதிகரிக்க ஆத்திரம் ஒரு மூலைக்குச் சென்று விட்டது அடக்க உணர்ச்சி மேலிட்டு விட்டது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

யார், யாரோ ஏதேதோ நம்மை இதுவரை எப்படி எப்படி யெல்லாமோ, இழித்தும் பழித்தும் பேசித் தானே வந்தனர்! அதற்கெல்லாம் ஆத்திரப்பட்டோமா? ஆயாசப்பட்டோமா? இல்லையே.

தோற்று விட்டிருக்கிருர்கள்! அவர்கள்!வெற்றியிலேயே இருந்தவர்களாயிற்றே! தோற்ற போது சும்மாயிருக்க முடியுமா? அவர்களும் மனிதர்கள் தானே! எதையாவது 'பேசி' விட்டுப் போகட்டுமே!

அவர்களது வீட்டிலே 'யாரோ' செத்து விட்டார்கள்! வெற்றியை இழந்து விட்டனர். எனவே, 'இழப்பை' வைத்துப் புலம்பி அழுகின்றனர், இதனுல் நமது காது குடைகிறது என்ருல் அவர்கள் 'துக்கம்' தீருவது எப்படி?

தங்கள் 'கோட்டை' என்று நினைத்துக் கொண்டிருந்த இடங்களை 'கோட்டை' விட்டு இருக்கின்றுர்களே! எப்படி வருத்தப்படாமல்—வருந்தியழாமல் வாய் விட்டுக் கதருமல் இருக்க முடியும்! அழுது ஓயட்டும் என்று விட்டுவிடுங்கள்! அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை,நாம்!

ஐந்துஅல்லது ஆறுகார்டுகளில் 'மிரட்டி' எழுதுகிருர்கள் என்றும் ஒருவர் குறிப்பிட்டார். கார்டு மட்டுமா வரும் நமக்கு! இன்னும் சிறிது நாட்களில் ஆங்கில நாட்டு ராபின் ஹாட் கதைகளில் வருவதைப் போல, நமக்குப் பக்கத்தில் கட்டாரிகளே வந்து வீழ்ந்தாலும் விழும்!

கார்டுகளைக் கண்டு கலங்கவில்லை, நாம்-நாளை வரும்-வரக்கூடிய கட்டாரிகளுக்கும் கலங்க மாட்டோம் என்பது உறுதி.

"கொலை செய்வோம்" என்று சிலர், கடிதங்கள் மூலம், நமது தோழர்களைப்பயமுறுத்தி இருப்பதாகவும் கூறப்பட்டது!

உண்மையிலேயே கொலை செய்யும் எண்ணம் படைத்தவன்-நெஞ்சுரம் கொண்டவன் எப்போதும் முன் கூட்டிச் சொல்ல மாட்டான். கோழை தான் 'கொலை' செய்ய எண்ணமிடுவான். ஆனல், அவன் ஏதோ ரஷ்யாவும் அமெரிக்காவும் போர் தொடுக்க நாள் குறிப்பதைப் போல தனது செய்கையை எண்ணிக்கொண்டு 'நாள்' குறிப்பிட மாட்டான்!

அப்படியே 'கொலை' தான் செய்யட்டுமே! அதுவீரமாகுமா? கடைந்தெடுத்தகோழைத் தனந் தானே, அது?

கொலை செய்துவிடலாம், எங்களில் ஒருவரை! அதனுல் என்ன? எங்களில் ஒருவர் பிணமாவார்! ஒரு பிணம் கீழே விழும்! அவ்வளவு தானே!

இதனுல் நாங்கள் கொண்ட கொள்கையைச் கொல்ல முடியாதே! அதைவிட அதனை ஆதரிக்கத்தானே வழிசெய்யும்? வகை ஏற்படும்?

குத்துண்டு, கொலை செய்யப்பட்டுகீழே வீழ்ந்துபடும் உடலத்திலிருந்து பீறிட்டுஎழும்இரத்தத்திலிருந்து-வீரம் மணக்கும் குருதியிலிருந்து மென் மேலும் ஆயிரமாயிரம் வீரர்கள் - தீரர்கள். தி,மு,கழகத் தொண்டர்கள் நிச்சயம் தொடர்ந்து தோன்றியபடிதானே இருப்பர்! இருக்கிருர்கள்!

எனவே எங்களைச் சூழ்ச்சியாலோ, பலாத்கார முறைகளாலோ—அல்லது படுகொலை செய்தோ யாராவது அழிக்க நினைப்பது வீண்—அது நடவாத காரியம் என்பது ஏற்கனவே தெரிந்து தானே!

எங்களை-தி,மு. கழகத்தை எப்படி யெப்படி யெல்லாமோ அழித்தொழித்து விட, தீர்த்துக் கட்ட இதுவரை யார்--யாரோ முயற்சித்தனர் - தோல்வியும் கண்டுள்ளனர் என்பதை உணருங்கள்!

இப்படி யெல்லாம், கடந்த காலத்தில் எங்களை அடித்தும், மிரட்டியும், ஒரு சிலரைப் பிணமாக்கியும் நீங்கள் கண்ட பலன் தான் என்ன? 'இருந்ததை' இழந்தீர்கள்! அது தானே!

நாங்களோ, இதனுல்,தியாகத் தழும்புகள் பெற்றேம், இன்று 'இதோ! எங்களில் ஒருவர் 'மேயர்' மற்ருெவர் துணைமேயர் என்று பெருமிதத்துடன் சுட்டிக் காட்டிடும் நிலைமைக்கு வளர்ந்திருக்கிறேம்!

ஆகவே, தோழர்களே! நாம், நம்மை எதிர்ப்பவர்களைப்பற்றிக் கவலைப்படாது, நமது வழி நடப்போம், நமது வெற்றிகளைச் செயல் வடிமாக்கிக் காட்டுவோம். வெற்றி வாகை மாலைகளை மேலும்வரிசை. வரிசையாகப்பெற்றுச் சுட்டிக்காட்டுவோம் இந்த வகையில் தான் நமது பணி இருந்திட வேண்டும். இதை விட்டு மாற்ருர் போன்று 'மூண்டா தட்டும்' வேலை நமக்கு வேண்டவே வேண்டாம். நாம் ஒரு போதும் அதிலே ஈடுபடுவதே கிடையாது என்பதையும் பெருமையோடு கூறிக் கொள்கிறேன்!

நமது கழகத்தின் அரும்பெரும் சொத்துக்களான, கடமை—கண்ணியம் கட்டுப்பாடு ஆகியவற்றிலிருந்து எப்போதும்—எந்தச் சமயத்திலும் எள்முனையளவும் விலகி விடவில்லை-ஒரு சிறிதும் விடாது காப்பாற்றி வருகிறேம் என்பதிலும் நான் மெத்த மகிழ்ச்சி யடைகிறேன்!

இவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் நடந்து வருகிறேம், நாம் இனியும் நடந்தே வருவோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தவரிடம், சென்னை மாநகர் ஆட்சிப் பொறுப்பு கிடைத்து விடுமா? பார்க்கலாம்! என்றெல்லாம் கேலி பேசி வந்தனர் காங்கிரசார், எப்படியும் அதனைத் தடுத்தே தீருவது என்று கடைசி வரை முயன்று தோல்வியும் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் பத்திரிகைச் செய்தி யொன்றைப் பார்த்தேன். நமது மேயர் திரு. அ. பொ. அரசு, துணை மேயர் திரு. சிவசங்கரன், நகரசபை தி. மு. கழகத் தலைவர் திரு. என். ஜீவரத்தினம் ஆகியோர் சென்னை முதலமைச்சர் திரு. காமராஜரை சந்தித்தனர் என்று அச் செய்தி கூறுகின்றது.

அதுமட்டுமா! எல்லோரும் ஒருவருக் கொருவர் மனம் விட்டுப் பேசினர். சென்னை நகர சபை நிர்வாகம் நன்கு நடக்க தமது மந்திரி சபையின்—சர்க்காரின் முழுஒத்துழைப்பு கிடைக்கும் என்று காமராஜர் மேயரிடம் உறுதி கூறியுள்ளார் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இதோடு, வட சென்னையில் அடிக்கடி ஏற்பட்டு வரும் கடலரிப்பை தடுக்க, உடனடியாக நகர சபைக்கு சர்க்கார் ஒத்தாசை செய்வதாகவும். அதனை ஏற்று நடத்தும் படியும் காமராசர், அரசுவிடம் தெரிவித்துள்ளாராம்.

இதற்கு என்ன அர்த்தம்? தி. மு. கழகத்தவர்கள் பொறுப்பற்றவர்கள் என்றே? அல்ல! அல்ல! பொறுப்பேற்று நடத்தக் கூடியவர்கள் என்று தானே பொருள்!

காமராஜர். சில மந்திரிகளைப் போல, பொறுப்பற்று, கட்சி மாச்சரியம் காட்டாமல், மாற்றுக் கட்சிகளுக்கு மதிப்பு தருவது குறித்து மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன். நல்லதோர் அர

நேருவே! நீயாக, நாட்டைப் பிரித்துவிடு!

இன்றேல் "திராவிடம் பிரிந்தது"! என்ற செய்தி தான்

உன்னை வந்து எட்டும்!

சியல் நாகரிகத்திற்கு எடுத்துக் காட்டு என்றும் பாராட்டுகிறேன்.

ஆனால், காமராஜருக்கு ஒன்று மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒத்தாசை செய்கிறோம், வேலையைத் துவக்குங்கள்", என்று வாய்ச் சொல்லோடு நின்று விடப் போகிறீர்கள்—அப்படி நிற்க மாட்டீர் என்று தான் கருதுகிறேன், எதற்கும் சொல்லி வைக்கிறேன், செயலிலும் உதவி செய்யுங்கள், என்று!

கடலரிப்பு தடுப்பு வேலை மட்டுமல்ல! மற்றும் எத்தனையோ திட்டங்கள் தீட்டப்படும், நகர சபையில்! அவற்றுக்கெல்லாம், காமராஜரே, உங்களது உறுதி மொழியின் படி, செயலில் உதவி செய்து காட்டுங்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன்

சென்னை மாநகரின் ஆட்சிப் பொறுப்பை நாம், நமது கழகத்தவர், திறம்பட நன்றாக நடத்த வேண்டும். அதைக் காணும், மக்கள் மாநில அரசுப் பொறுப்பையும் நம்மிடம் தரும் 'சூழ்நிலை' நிச்சயம் ஏற்படும்.

இந்த வெற்றி போதாது! நகர சபையில் கிடைத்த வெற்றியுடன் திருப்தி யடைந்து விட முடியாது. நாம் மேலும் நமது பயணத்தை தொடரத் தான் வேண்டும்.

சட்ட சபையில் இன்று நாம் 15 பேர் தான் இருக்கிறோம். இந்த '15' பேர் '150' என்றுமாறினால், நிச்சயம் திராவிட நாடு. திராவிடருக்கே ஆகும்! அதற்கான 'சூழ்நிலை' பிறக்கும்.

எப்படி இந்தச் 'சூழ்நிலை' பிறக்கும் என்று கேட்பீர்கள்!

இப்படிப்பட்ட 'சூழ்நிலை' நிகழ்ச்சி, 'கனா' நாட்டில் ஏற்பட்டது; அதன் விளைவாக 'கனா' நாடு விடுதலையும் அடைந்துள்ளது என்பதைத்தான் இதற்குப் பதிலாகக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 'கனா' நாட்டுப் பிரதமர் நிக்ருமா, இந்தியத் துணைக்கண்டத்திற்கு வந்திருந்தார். அதுசமயம் தோழர் நிக்ருமா தென்னகத்திற்கும்—திராவிடத்திற்கும் வந்தார். மகாபலிபுரம், மதுரை திருமலை நாயக்கர் மகால் முதலியவற்றையும் சுற்றிப் பார்த்துச் சென்றார்.

'கனா' நாடு என்பது அதற்கு இன்றுள்ள பெயர். முன்பு அதற்கு 'கோல்டுகோஸ்ட்' என்று பெயர்.

இந்த கோல்டு கோஸ்ட் என்று அழைக்கப்பட்ட 'கனா' நாடு 200 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டிஷாரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது.

இந்த நாட்டினர், தமது அடிமைத் தளையை அகற்றி, அண்மையில், சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் சுதந்திரம் பெற்றார்கள். இன்று 'கனா' தனியரசு செலுத்தும் நாடாக விளங்குகிறது.

'கனா' நாடு எப்படிச் சுதந்திரம் பெற்றது? அதனுடைய 'விடுதலை' வரலாற்றினைத்தான் நாம் கவனிக்கவேண்டும்.

1956-ம் ஆண்டு கோல்டு கோஸ்ட் என்று சொல்லப்பட்ட 'கனா' நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அப்போது அது அடிமை நாடுதான்.

'கனா' நாட்டு சட்ட சபையில் மொத்தம் 104 உறுப்பினர்கள். 'விடுதலை' இயக்கத்தைச் சார்ந்த தோழர் நிக்ருமாவின் கட்சிக்கு இதில், இத்தேர்தலில் 72 இடங்கள் கிடைத்தன, நிக்ருமா அந்நாட்டுப் பிரதமர் ஆனார். ஆட்சிப் பொறுப் பேற்றார்.

தோழர் நிக்ருமா, பிரதமராகப் பதவி யேற்றதும், முதன்முதல் கூடிய சட்ட சபையில் நிறைவேற்றிய தீர்மானம் என்ன தெரியுமா? "கோல்டு கோஸ்ட்" தனிச் சுதந்திர நாடாகிவிட்டது" என்ற பிரகடனம்தான் அது!

மக்களது பெருவாரியான ஆதரவுடன், சட்ட சபையில் அதிகப்படி உறுப்பினர்களைக் கொண்ட விடுதலை இயக்கத்தின் தலைவன் விடுத்த இந்த சுதந்திர பிரகடனத்தை, தன்மான அறைகூவலை — முழக்கத்தைக்கேட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அஞ்சியது. உடன் அரசியல் யூகத்துடன் 'கோல்டு கோஸ்டு'க்கு விடுதலை வழங்கியது. 'கனா' சுதந்திர அரசு உதயமாகி விட்டது!

தோழர்களே! ஒரு கணம், எண்ணிப் பாருங்கள், 'கனா' நாட்டுச் சட்டசபையில் பெருத்த ஆதரவுடன் தோழர் நிக்ருமா! சென்னை சட்டசபையில்பெருத்த ஆதரவுடன் அறிஞர் அண்ணா!

தோழர் நிக்ருமாவின் பக்கத்தில் 104 பேர் கொண்ட சட்ட சபையில் 72 பேர். 205 பேர் கொண்ட சட்ட சபையில் அறிஞர் அண்ணாவின் பக்கத்தில் 150 பேர்!

இந்தநிலை ஏற்பட்டால் என்ன ஆகும்! நிக்ருமா நிறைவேற்றியது போல, அறிஞர் அண்ணாவும் முதலில் 'திராவிடத் தனியரசுப்பிரகடனம்' செய்யும் தீர்மானத்தைத் தானே முதலில் நிறைவேற்றுவார்! அந்த நிலையை ஏற்படுத்துவது உங்கள் கடமையாகும்,

மிக, மிக அண்மையில், சைப்ரஸ் நாடு—சிறு தீவு சுதந்திரம் பெற்றுள்ளதைப் பார்க்கிறோம்!

இந்த சைப்ரஸ் நாடு - சிறு தீவு. ஐந்தே லட்சம ஜனத் தொகையைத்தான் கொண்டது, அதாவது சென்னை நகர சபைத் தேர்தலில் பதிவான வாக்காளர் தொகை யளவுதான்.

இந்தச் சின்னஞ் சிறு நாடு-தீவு - விடுதலை பெற்றுள்ளது - தனியரசு செலுத்துகிறது!

சைப்ரஸ் தீவு விடுதலை பெற வில்லேந்த வில்லை, வாளேந்திப் போரிடவில்லை. ஜபமாலை உருட்டி, தாடியுடன் விளங்கும் ஒரு சாதாரண பாதிரி மக்காரியஸ் அவர்களது தலைமையின் கீழ் நடைபெற்ற விடுதலை இயக்கமே இதற்குக் காரணமாகும்.

போப்பாண்டவர் 'வாழும், 'வாடிகன் நகரம்', ஒரே ஒரு ஆயிரம் மக்கள்மட்டுமே வாழும் இடமாகும். என்றாலும். 'வாடிகன் நகரம்' தனிநாடாகவிளங்குகிறது.

ஆனால் 9 கோடி திராவிடரைக் கொண்ட திராவிட நாட்டுக்கு விடுதலை இல்லை. 3 கோடி தமிழருக்குத் தனிநாடு கிடையாது! நமது திராவிட இன விடுதலை முழக்கம், எழுச்சி முரசு பற்றி, சைப்ரஸ் பற்றிப் பேசும் இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர், நேரு பெருமகனார் கண்டும் காணாதவராய், கேட்டும் கேளாதவராய் இருந்து வருகிறார்! இவதத்தான் நாம் கவனித்து, ஆவன செய்தாக வேண்டுகிறேன்!

திபேத் நாட்டுப் பிரச்சினை இன்று பெரும் பிரச்சினையாகி விட்டிருக்கின்றது!

தாலாய்லாமா-திபேத்தின் மத குரு—பூதேவர் – அரசுக்கு உரியவர் என்று கூறப்படுகிறது.

மற்றொரு பக்கம் பஞ்சன் லாமா! இவரும் ஒரு மதத் தலைவர்தான். ஆனால் மக்கள் மறுமலர்ச்சி - என்னும் கம்யூனிசக் கருத்துக் கொண்டவராம், சீன ஆதிக்கத்திற்கு அடிபணிந்துள்ளாராம்.

தலாய் லாமா திபேத்தின்மீது சீனாவின் ஆதிக்கம் கூடாது என்றாராம், சீன ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. கலவரம் மூண்டது.

தலாய் லாமா திபேத்தை விட்டு இந்தியாவுக்கு ஓடிவந்து 'புகலிடம்' பெற்றுள்ளார்!

பூதேவர் எனப் பெருவாழ்வு வாழ்ந்து வந்த தலாய் லாமா 1500 மைல் நடந்து வந்தார். பூதேவரது பொற்பாத கமலங்களில் கல்லும் முள்ளும் தைக்க இரத்தம் சொட்டச் சொட்ட நடந்து வந்தார்! காடு, மேடு, மலை, மடு ஆகியவற்றையும் கடந்து— தாண்டி பெரும் அல்லல்களை அனுபவித்தபடி இந்தியாவில் புகுந்து 'பாது காப்பு' பெற்று வாழ்கிறார்!

தலாய் லாமா, எதற்காக இப்படி ஓடி வந்தார்! தன்னுடைய சொந்த உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவா? அல்ல, அல்ல! திபேத்நாட்டின் தனி உரிமையை என்றாவது ஒரு நாள் — எப்படியாவது பெறலாம் என்ற எண்ணத்தினால் தான் வந்துள்ளார்,

திபேத்தில் உள்ள மற்றொரு மதத் தலைவரான பஞ்சன் லாமா சீன அரசாங்கத்துடன் நட்புறவு கொண்டு, திபேத்தின் தலைவராகப் பவனி வருகிறார்.

இந்த இரு லாமாக்களில் எவர் செய்வது சரி! எவர் செய்வது தப்பு என்பது பற்றிய ஆராய்ச்சி கூட நமக்குத் தேவையில்லை, இப்போது.

முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது, இப்பிரச்சினையில் நேரு பெருமகனார் காட்டிடும் கருத்தும் கவனிப்பும்தான்!

நேருவும் திபேத்தும்! நேருவும் தலாய் லாமாவும்! இதுதான் நாம் கவனிக்க வேண்டிய பிரச்சினையாகும்!

நாற்பத்து ஆறாயிரம் சதுர மைல்களைக் கொண்டது திபேத் நாடு. அங்குள்ள மக்கள் தொகை 13 லட்சம்தான். சென்னை நகரின் ஜனத்தொகை மட்டும் 17 லட்சம் என்பதையும் கவனியுங்கள்.

இவ்வளவு சிறிய பரப்பும், சென்னை நகரைவிடக் குறைந்த மக்கள் தொகையையும்படைத்த 'திபேத்' நாட்டு விடுதலைக் 'குமுறல்', குறித்தும், 'கலவரம், பற்றியும், புகைச்சல்—பூசல் ஆகியவைகளையும் நேரு பெருமகனார் கருத்தோடு கவனிக்கிறார் —அவைகள் நீங்கி—சமரசம் தேவை என்று பேசுகிறார்— பாடுபடுகிறார்!

திபேத்—சைப்ரஸ் நாட்டு விடுதலை—தனியுரிமை குறித்து அகில உலகமும் மெச்சிடப் பேசிடும் நேருவுக்கு—நமது விடுதலைக் குரல்—திராவிட இன எழுச்சி முரசு குறித்து மட்டும் ஏன் அக்கரையில்லை! கருத்து இல்லை என்று கேட்கிறேன்!

உலகத்தில் உள்ள சின்னஞ் சிறு நாடுகளது உரிமை பற்றி வக்காலத்து வாங்கிக் 'குரல்' கொடுக்கும் நேரு— திராவிட மக்களது விடுதலைக் குரலை அவமதிப்பதா? 'குரல்' வளையை நெறிப்பதா! நீதியாகுமா, இது?

நாம் என்ன சாதாரணமானவர்களா! நாம் தனி இனம்—திராவிடர் இனமல்லவா! நமது முதாதையர் தனியரசு செலுத்தியவர்கள் தானே! நாம் இழந்த உரிமையைத் தானே கேட்கிறோம்!

தகத்தகாவென வாட்கள் மோதி மின்னிடும் வண்ணம் எட்டுத்திக்கும் வெற்றி முரசு கொட்டி, எதிர்த்தோரை முறியடித்த சேரன் செங்குட்டுவன் எங்கள் 'தாத்தா'!

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் எங்கள் முப்பாட்டன் திருமாவளவன் கரிகால் பெருவழுதி நமது மூதாதை!

முத்துக் கடலே! முல்லைக் கொல்லையே! செந் நெல்லும், கரும்பும் விளைந்திடும் கழனியே என விளங்கிய பூமி, எங்கள் பூமி!

எகிப்து நாட்டு எழிலரசியாம்

குடும்பங் குடும்பமாகக் கழகத்தில் சேருங்கள்!
உரமும் உற்சாகமும் ஊட்டுங்கள்!

கிளியோபாட்ரா, தமிழகத்து முத்து மாலை யணிந்தாள் எனப் புகழுடன்வாழ்ந்தோம்-நாம், ஒரு நாள்.

ஆனால் இன்றோ! நமது தோழர்கள் வறுமையால் வாடி, வதங்கி கடல் கடந்தும் சென்று வாழ வழியற்று தேம்பித் திண்டாடித் தவித்திடும் நிலைமையைக் காண்கிறோம்! முத்து விளைந்த நாட்டில் "முத்து முத் தாய்க் கண்ணீர் சொரியும் நிலைமையா, இன்று?

கேட்கிறோம்! நேரு பெருமகனாரை! எங்கள் நாட்டை எங்களிடம்ஒப்படைத்துவிடு,என்று!

"கேளுங்கள், கொடுக்கப்படும்! தட்டுங்கள், திறக்கப்படும்!" என்று ஒரு பழமொழி உண்டு.

இந்த முறையில் கதவைத் தட்டுகிறோம்! ஆனால் உள்ளேயிருந்து எந்தச் சத்தமும் பதிலுக்கு வரக்காணோம்!

கடந்த ஆண்டு பிரதமர் நேரு, சென்னை வந்த போது 'கருப்புக் கொடி' காட்டி கதவைத் தட்டினோம்! திராவிட இன எழுச்சிக் குரல் எழுப்பினோம்—விடுதலை முழக்கத்தை உணர்த்தினோம்! பதில் வரவில்லை!

இந்த ஆண்டு நேரு சென்னை வந்தார். இபபோது காமராஜரிடம் என்ன கேட்டிருப்பார்! முன்பு வந்தபோது என்ன கேட்டிருப்பார்! காமராஜர் என்ன பதில் சொல்லியிருப்பார்?

கடந்த ஆண்டு "கருப்புக் கொடி காட்டுகிறவர்கள் யார்?" என்று நேரு கேட்டிருப்பார். "அவர்கள் சாதாரணமானவர்கள்! பல மற்றவர்கள்" என்று தான் காமராஜர் பதில் சொல்லியிருப்பார், அலட்சியமாக!

இந்த ஆண்டு நேரு வந்தபோது "எங்கே, சென்ற தடவை கருப்புக் கொடி காட்டியவர்களைக் காணோமே!எங்கே போய் விட்டார்கள்" என்று கேட்டிருப்பார்!

காமராஜர் என்ன பதில் சொல்லியிருப்பார்! 'ஆமாம்! கருப்புக் கொடி காட்டவில்லை. அவர்கள் எல்லோரும்இப்போது சென்னை 'கார்ப்பரேஷன்' உள்ளே போய் விட்டார்கள்" என்று தானே சொல்லி யிருக்கக் கூடும்.

சென்ற தடவை நேரு வந்த போது கருப்புக் கொடி' காட்டி கதவு தட்டினோம்! அ. பொ. அரசும் அதிலே ஒருவர், இப்போது கார்ப்பரேஷன் உள்ளே சென்று ஆட்சியில் அமர்ந்து மேயர் அ. பொ. அரசு மூலம்கதவைத் தட்டுகின்றோம்!

உள்ளே இருந்து சத்தம் எதுவும் வரவில்லை. என்ன அர்த்தம் இதற்கு! உள்ளே யிருப்பவர்கள்! 'பிணமாகி' விட்டார்கள் என்பதா! அல்லது 'ஏதோ' நடக்கக் கூடாதது நடக்கிறது எனவே தான் சத்தம் அடங்கியிருக்கிறது என்று அர்த்தமோ!

பிரதமர் நேரு மீண்டும் சென்னை வந்தால். மேயர் அ. பொ, அரசுவின் கையைக் குலுக்குவார்.அதே சமயம் அரசுவின் புறங்கையில்: உள்ள 'தழும்பு' நேருவின் கண்ணில் படும். உறுத்தத்தான் செய்யும்!

கடந்த முறை நேரு சென்னை வந்த போது கருப்புக் கொடி காட்டினார் தோழர் அரசு! அப்போது அக்கிரம காங்கிரஸ் அரசாங்கத்தினர் அடக்குமுறை தர்பார் தந்த பரிசு—தியாகத் தழும்பு,அது!

சென்ற தடவை 'தழும்பு' பெற்றார். இப்போது அந்தக் கை நேருவுடன் கைகுலுக்குகிறது!

இதுதான் திராவிடத் தேசியக் கனலை அடக்கியும் அலட்சியப் படுத்தவும் நினைத்து நடந்ததின் விளைவு என்பதை அரசாங்கம் உணரும் வேளை வந்து விட்டது!

நேருவே! இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் நேருவே! அகில உலக நாடுகளது ஆசியல் உரிமை—விடுதலைபற்றிப் பரிந்து பேசும் நேருவே! இனியும் திராவிடத்தின் தேசிய இன எழுச்சியை—புரட்சிக் கனலை, குமுறும் எரிமலைக் குழம்பை அலட்சியப் படுத்த நினையாதீர்! அடக்கி விடலாம் என்று கனவு காணாதீர் என்று எச்சரிக்கிறேன்!

'திராவிட நாடு திராவிடருக்கே!' என்ற முழக்கம் இன்று 'கேள்விக்குறி'யாக இருக்கலாம். நாளையோ, மறுதினமோ விரைவில் இதற்கு இவ்வளவு ஆதரவா! என்று திகைக்கும் அளவுக்கு "ஆச்சரியக்குறி"யாக மாறும், மாறித் தீரும்!

பிறகு ஒரு நாள், அகில உலகு எங்கணும் "திராவிட நாடு திராவிடருக்கு ஆகிவிட்டது," என்று ஒலி பரப்பப் படுவதைத் தான் பிரதமர் நேரு கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும்!

ஆம்! பிரதமர் நேரு, தாமாக, திராவிட நாட்டிற்கு விடுதலை தரும் காரியத்தைச் செய்து, நல்ல பெயர் எடுக்க முன் வராவிட்டால், நிச்சயம், ஒரு நாள், நாமே திராவிட நாட்டைப் பிரித்து, தனிக் கொடி பறக்க விட்டு தனியரசு செலுத்தும் நிலைமை-நிச்சயமாக ஏற்படத் தான் போகிறது! இது உறுதி என உணருங்கள்!

ஓங்கி வளர்ந்து வரும் விருட்சத்திற்கு—தி. மு. கழகத்திற்கு, திராவிட இன விடுதலைப் பணிக்கு சென்னை நகர வெற்றிகளைப் போன்றவைகள் எல்லாம், சிறிது பாலூற்றுவது போலத்தான்! மேலும் பெற வேண்டிய பலப்பல வெற்றிகளுக்கு ஒரு சிறிது அனுசரணை தான் என்று கருதுகிறேன்!

எனவே, சென்னையில் நாம் பெற்றுள்ள தகுதியை, நமது நல்ல பணியின் மூலம் மேலும் மேலும் உயர்த்தி கழகத்திற்கு உரம் ஊட்டுங்கள்! திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவரும் குடும்பங் குடும்பமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக ஆகுங்கள்! உற்சாக மூட்டுங்கள் என வேண்டிக் கொள்கிறேன்

வணக்கம்.

'கணை' தொடுக்கிறார்கள்! (2-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான இடங்களைப் பிடித்துக் கொண்டிருக்கும் ஒரு கட்சி மற்றவர்களின் துணையை நாடி, அவர்களைச் சேர்த்துக் கொண்டு ஆட்சி புரிய வேண்டிய அவசியமே இல்லை!

திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா கட்சியின் ஒத்துழைப்பையும் பெற்று, நல்ல நிர்வாகம் செய்து மக்களுககுப் பணி புரிய வேண்டும் என்று எண்ணியதால் தான் காங்கிரஸ் கட்சிக்கும், கூட்டணிகட்சிக்கும் இடமளிக்க முன் வந்தது, தி. மு. க. காங்கிரஸ் கட்சியாக இருந்திருந்தால் நிச்சயமாக ஒரு இடத்தைக் கூட தர முன் வந்திருக்காது! இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் இருந்த இடத்தில் காங்கிரஸ் இருந்தபோது எதிர் கட்சிகளுக்கு எத்தனை இடங்களை அளித்தது? விரல் விட்டு எண்ணிச் சொலட்டும்! விரல் விட்டுக் காட்ட வழியுண்டா? வக்குண்டா? வகையுண்டா?

திராவிட முன்னேற்றக் கழகம் வெறும் பதவிக்கும், அதிகார மோகத்திற்கும் ஆசைப்பட்டு, மக்களை துச்சமென மதித்து, "அனுபவித்தவரையில் சுகம்" என்று எண்ணி இருந்தால் ஒரு இடத்தைக்கூட காங்கிரஸ்காரர்கள் எதிர்பார்த்திருக்க முடியாது! எல்லோரும் ஒன்றாக இணைந்து மக்களுக்கு நல்வாழ்வளிக்கவேண்டுமென்று எண்ணியதால் தான் உங்களை கடைசி வரையில் கெஞ்சினோம்! ஆனால் நீங்களோ வெறும் பதவிப் பித்தர்கள் என்பதைக் காட்டிக் கொண்டு விட்டீர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகத்தை சீர்குலைத்து மக்களிடம் தப்புப் பிரச்சாரம் செய்து, "பாருங்கள்! பாருங்கள்! இவர்கள் என்ன சாதித்து விட்டார்கள்!" என்று வீண்பழிகளைச் சுமத்திடலாம் என்ற எண்ணத்தில் கூட இதை நீங்கள் செய்திருக்கலாம் என்று தோன்றுகிறது!

உங்களுக்கு ஒவ்வொரு குழுவிலும் அதிக இடங்களைத் தந்து, பூர்ண மெஜாரிட்டி பலத்துடன் நீங்கள் இருந்தால் எங்கள் நிர்வாகம் சரிவர நடை பெறுமா? ஒவ்வொரு திட்டத்தையும் குழப்பமில்லாமல், தகராறு செய்யாமல் நிறைவேற்றித்தருவீர்களா?

கல்வியைப்பற்றி, பள்ளி நிர்வாகத்தைப்பற்றி நாங்கள் ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்று நினைத்தால் அங்கே மெஜாரிட்டியோடு விளங்கும் நீங்கள் "அது கூடாது, இது ஆகாது" என்று தானே எதிர்ப்புகளை கிளப்புவீர்கள்! இதைப்போல் எந்தக் காரியத்தை செய்ய முன் வந்தாலும் ஆங்காங்கே இருந்து கொண்டு முட்டுக் கட்டை போட்டு எங்களுக்கு கெட்ட பெயரைத் தானே மக்களிடத்தில் ஏற்படுத்தித் தருவீர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் வியக்கத்தக்க முறையில் பணி புரிந்து மக்களின் செல்வாக்கைப் பெற்றுவிட்டால் காங்கிரஸ் கட்சியின் பூண்டே ஒழிந்து போய்விடும்! நாளைய தினம் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டு விடும் என்ற அச்சத்தால்தான் நம்மீது ஆரம்பத்திலேயே தாக்குதல் நடத்த கிளம்பி இருக்கின்றனர்!

காங்கிரஸ்காரர்களுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையும், நாட்டின்மீது அக்கரையும், மக்களுடைய வாழ்க்கையில் கவலையும் உண்மையிலேயே இருக்குமானால் மக்கள் அளித்த தீர்ப்புக்கு மாறாக நடக்க முன்வந்திருக்க மாட்டார்கள்!

37 பேர்களைக் கொண்ட நீங்களாவது தேர்தலில் நின்றிருந்தால் கூட பரவாயில்லை! "ஏதோ பதவி ஆசை ஒழிந்து போகட்டும்" என்று இருந்து விடலாம்! ஆனால் இரண்டே இரண்டு பேரைக் கொண்ட ஒரு கட்சிக்காரரை பதவியில் அமர்த்த எண்ணியது நாட்டுக்கு இழைத்த பச்சைத் துரோகமாகும்! பத்து மாதம் சுமந்து பெற்ற பச்சிளங் குழந்தையை ரத்தம் சொட்டச் சொட்ட கூர்மிகு கொடு வாளால் கண்ட துண்டமாக வெட்டிக் களித்து மகிழ்ந்திடும் அரக்க எண்ணம் படைத்த மனிதவேங்கைக்கு ஒப்பாகும்!

நீங்கள் செய்த இந்தக் கொலை பாதகச் செயல் நாடு, நகரம் அதிலே மக்கள் வாழும் நிலை உள்ளளவும் மறையாது!

உங்கள் கட்சிக்கு ஏற்பட்ட ரத்தக் கறையை நீங்கள் இனி எத்துணைப் பிராயச் சித்தங்களைச் செய்தாலும், கழுவிடவே முடியாது!

உலகம் போற்றும் உத்தமர் காந்தியாரை சுட்டுக் கொன்ற கோட்சேயைவிட உங்கள் செயல் மிகக் கொடியதாகும்! மறக்க முடியாதது! மன்னிக்க முடியாதது!

காந்தியாரை சுட்டுக் கொன்ற கோட்சே என்னும் கொடியவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது!

அவன் காந்தியாரைக் கொன்றான்! நீங்களோ காந்தியாரின் கொள்கைகளையே கொன்று நெருப்பில் போட்டு பொசுக்கி சாம்பலாக்கி விட்டீர்கள்!

மக்கள் மன்றம் தீர்ப்பு வழங்கக் காத்திருககிறது! தயாராகிக் கொள்ளுங்கள்! அந்த நேரம் வரையிலாவது எங்களுக்கு இடையூர் விளைவிக்காமல் இருப்பீர்களா?

காங்கிரஸ் கட்சி தன் கடைசி காலத்திலாவது நல்லது செய்யுமென்றேநம்புகிறேம்!

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ். 404. திருவல்லிக்கேணிஹைரோடு. சென்னை.
அலுவலகம் 1-35 வாணியர் தெரு. சென்னை-14.